2000 மார்ச் 30]

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பெரியேரி ஊராட்சி வகுத்தலூர் மற்றும் தானம்பூசாரி வளவில் சத்துணவுக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. கோவிந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் தொகுதியில் பெரியேரி ஊராட்சி, வகுத்தலூர் மற்றும் தானம்பூசாரி ஆகிய அந்தப் பகுதிகளிலே மிகப் பிற்படுத்தப்பட்ட விவசாயக் குடிமக்கள் வாழ்கின்றனர். அந்தப் பகுதியிலே இருக்கின்ற குழந்தைகளுக்குச் சத்துணவுக் கூடம் ஒன்றை அமைப்பதற்கு, அந்த குழந்தைகளின் நலன் காக்க, நமது அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சத்துணவு மையம் அமைப்பதற்குக் குறைந்தபட்சம் 3 வயதிலிருந்து 5 வயது வரை உள்ள குழந்தைகள் 25 பேர் இருக்க வேண்டும். மக்கள்தொகை 1000-ஆவது இருக்க வேண்டும். ஆனால் வகுத்தலூர், தானம்பூசாரி வளவுப் பகுதியில் மொத்த குழந்தைகள் 19 பேர் தான் இருக்கின்றனர். ஜனத்தொகை மொத்தம் 500 தான் இருக்கின்றது. ஆகவே அங்கே சத்துணவு மையம் ஏற்படுத்த வாய்ப்பில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 158, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.*

158—

கால்நடை மருத்துவமனை

***30626—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மார்ச் 30

(அ) வேடசந்தூர் தொகுதி. வடமதுரை ஒன்றியம், குளத்தூர் ஊராட்சி, காளணம்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், குளத்தூர் ஊராட்சி, காளணம்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. சீ.வெ. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேடசந்தூர் தொகுதியில் நான் சுற்றுப்பயணம் மேற்கொண்ட நேரத்திலே, நூற்றுக்கணக்கான மனுக்கள் தரப்பட்டன. அவற்றில் "கால்நடைகளைப் பாதுகாக்க வேண்டும், கால்நடைகளை வெறிநாய் கடித்து விடுகிறது, கால்நடை மருந்தகத்தில் வெறிநாய்க் கடிக்கான மருந்துகள் வேண்டும்" என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். அந்தக் கோரிக்கை மனுவை நம்முடைய தமிழக முதல்வர் அவர்களிடத்திலும், கால்நடைத் துறை அமைச்சரிடத்திலும் நேரடியாகக் கொடுத்த நேரத்தில், இப்போது அந்தக் கோரிக்கையை ஏற்று, கால்நடை மருத்துவமனைகள் அனைத்திற்கும் வெறிநாய்க் கடிக்கான மருந்துகள் அனுப்பியதற்காகத் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுக்கும், கால்நடைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு, வடமதுரை ஒன்றியத்தில், காளணம்பட்டியிலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது என்ன வினாவா?

திரு. சீ.வெ. கிருஷ்ணன்: மருத்துவமனை அமைக்க அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஊராட்சி ஒன்றியம், குளத்தூர் ஊராட்சி, காளணம்பட்டி கிராமத்தில் கால்நடை மருந்தகமோ அல்லது கால்நடை கிளை

2000 மார்ச் 30]

நிலையமோ தற்போது இல்லை. எனினும் வடமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு இடங்களில் கால்நடை மருந்தகங்களிலும் ஐந்து இடங்களில் கால்நடை கிளை நிலையங்களிலும், அவற்றுக்கு இணையாக ஐந்து கால்நடை பார்வை கிளை நிலையங்களிலேயும் தற்போது கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றன. காளணம்பட்டி கிராமத்தில் கால்நடை மருந்தகமே இல்லாத நிலையில், அக்கிராமத்தில் முதன்முதலாக கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை. என்றாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள சிறப்புக் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் மாவட்டங்களிலே கால்நடை மருத்துவமனை இல்லாத ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலேயும் பல்வேறு இடங்களிலே ஒவ்வொரு மாதமும் கால்நடை மருத்துவ சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன்மூலம் காளணம்பட்டி பகுதியிலுள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்து பயன் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ.வி.ஏ. நாசர்.

திரு. ஏ.வி.ஏ. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடமதுரை ஒன்றியம், குளத்தூர் ஊராட்சி, காளணம்பட்டியிலே கால்நடை மருந்தகம் இல்லை என்று சொன்னார்கள். எனவே மருந்தகம் இருந்தால்தான் மருத்துவமனை உருவாகும் என்ற சூழ்நிலை இருக்கும்போது அங்கு மருந்தகமாவது அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஆண்டும் மருந்தகங்களை அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து அறிவிப்பார்கள். சென்ற ஆண்டு 10 கால்நடை மருந்தகங்கள் தொடங்குவதற்கு அரசின் மூலம் அனுமதி அளித்திருந்தார்கள். இந்த ஆண்டு அது மானியக் கோரிக்கையில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 159, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.